©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 4.00 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 11] சென்னை, புதன்கிழமை, மார்ச் 21, 2012
பங்குனி 8, திருவள்ளுவர் ஆண்டு–2043

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

2012–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:—

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2012**

***தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.***

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:—

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச்சட்டத்தை இப்போது இதன்மூலம் பிறப்பிக்கின்றார்.—

**பகுதி–I**

**முன்னுரை**

**1.** (1) இந்த அவசரச் சட்டம் 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி–II**

**1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV/**1919**. **2.** 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 414–ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– **414–A எனும் புதிய பிரிவை புகுத்துதல்.**

**"414–A நகரத்தின் பரப்பிடத்தை விரிவுபடுத்துவதன் பேரிலான மாறுதல் கால வகைமுறை.—** (1) நகரத்தின் பரப்பிடமானது விரிவுபடுத்தப்படும்போது விரிவுபடுத்தப்பட்ட பரப்பிடம் தொடர்பான, நகராட்சி மன்றத்தால் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் அல்லது சிற்றூராட்சியால் அல்லது அதற்காகப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் அனைத்து உரிமைகளும் அவை எந்த வகையினதாக இருந்தாலும் மற்றும் அதற்குச் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி

என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்களும் அவை எந்த வகையினதாக இருந்தாலும் அதோடு கூட மேற்சொன்ன நகராட்சி மன்றத்திற்கு ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சிக்கு எதிராகச் சட்டமுறையில் இருந்து வருகிற அனைத்து கடப்பாடுகளும், நகரத்தின் அத்தகைய விரிவாக்கம் குறித்து விளம்புகை செய்யப்பட்ட அந்த அறிவிக்கையின் தேதியன்றும் அது முதற்கொண்டும், இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்புரைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றடைதல் வேண்டும்.

(2) அத்தகைய அறிவிக்கையின் தேதியன்று அத்தகைய நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சிக்குக் கொடுபட வேண்டிய, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் பணிகளை பொறுத்த அளவிலான அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் தவிர உள்ளவாறான வரிகளின் அனைத்து நிலுவைகள் அல்லது வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்கள் அல்லது செலவுகளுக்குக் கொடுபடவேண்டிய தொகைகள் அல்லது இழப்பீடு அல்லது பிறவாறு கொடுபடவேண்டிய தொகைகள் ஆகியவை, அத்தகைய மாநகராட்சிக்கென சேர்ந்த தொகையாகக் கருதப்பட்டும் அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி, கொடுபடவேண்டிய நிலுவைகளாக அல்லது தொகைகளாகியிருந்தவை போன்றும் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியால் விதிக்கப்பட்டு வந்த, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் பணிகள் ஆகியவற்றுக்கானவை நீங்கலான அனைத்து வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் ஆகியன இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் ஆகியவை இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுகின்ற நீக்கப்படுகின்ற அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுகின்ற வரையில் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(4) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் V/1920) அல்லது நேர்விற்கேற்ப 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994), குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் பணிகளைப் பொறுத்த அளவில் தவிர அத்தகைய நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது சிற்றூராட்சி எதனாலும் அல்லது அதிகார அமைப்பு எதனாலும், அல்லது நபர் எவராலும் எடுக்கப்பட்ட அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட செயல் நடவடிக்கைகள் அனைத்தும் அத்தகைய செயல் நடவடிக்கைகளானவை இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால், அதிகார அமைப்பால் அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடங்கியிருந்தாற்போன்று தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(5) அறிவிக்கையின் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும், V/1920 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டம் அல்லது நேர்விற்கேற்ப 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின்படி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் பணிகளைப் பொறுத்த அளவில் தவிர எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்று, இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்குரிய தகுதி வாய்ந்த அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் பணிகள் தொடர்பானவை தவிர அத்தகைய நகராட்சியின், பேரூராட்சியின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய அறிவிக்கையின் தேதியன்றும், அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலரொருவராக அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதலாம் வரம்புரை:* ஆனால், (a) மாநகராட்சியின் பணியில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலருக்கு மற்றும் பணியாளருக்குப் பொருந்தத்தக்க அடிப்படை சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதியம், ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவை குறித்த வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக, அத்தகைய அலுவலருக்கு அல்லது பணியாளருக்குப் பொருந்தக்கூடிய அத்தகைய வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய நகராட்சியின், பேரூராட்சியின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின்கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, அத்தகைய அறிவிக்கையின் தேதி வரையில் மாநகராட்சியின்கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல்

வேண்டும் மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதியம், பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு உரிமைத் தகுதி உடையவராயிருத்தல் வேண்டும்.

*இரண்டாம் வரம்புரை:* மேலும், அத்தகைய நகராட்சியில், பேரூராட்சியில் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் எவரும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் அவர் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கோ அல்லது V/1920 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு அல்லது நேர்விற்கேற்ப 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 104 மற்றும் 105–ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டவாறான பணிக்கு அவர் மாற்றம் செய்யப்படுவதற்கோ அல்லது அவர் அத்தகைய நகராட்சியின், பேரூராட்சியின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் பணியிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்படுவதற்கோ, அவருக்கு விருப்பத் தெரிவினைச் செய்வதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய ஆட்குறைப்பின்போது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நலன்களுக்கு அவர் உரிமைத் தகுதியுடையவராதல் வேண்டும்.''.

## பகுதி–III

## 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 15/1971.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. (இதன் பின்பு இப்பகுதியில் 1971–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் 3ஆம் பிரிவில், (8)–ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

510–AA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

4. 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 510–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**“510–AA நகரத்தின் பரப்பிடத்தை விரிவுபடுத்துவதன் பேரிலான மாறுதல் கால வகைமுறை.— (1)** உள்ளூர்ப் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கி நகரத்தின் பரப்பிடமானது விரிவுபடுத்தப்படும்போது அத்தகைய உள்ளூர் பரப்பிடம் தொடர்பான, நகராட்சி மன்றத்தால் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் அல்லது சிற்றூராட்சியால் அல்லது அதற்காகப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் அனைத்து உரிமைகளும் அவை எந்த வகையினதாக இருந்தாலும் மற்றும் அதற்குச் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்களும் அவை எந்த வகையினதாக இருந்தாலும் அதோடு கூட மேற்சொன்ன நகராட்சி மன்றத்திற்கு, ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சிக்கு எதிராகச் சட்டமுறையில் இருந்து வருகிற அனைத்து கடப்பாடுகளும், அத்தகைய உள்ளூர்ப் பரப்பிடத்தை நகரத்தில் உள்ளடக்கிச் செய்யப்பட்ட அந்த அறிவிக்கையின் தேதியன்றும் அது முதற்கொண்டும், இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்புரைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றடைதல் வேண்டும்.

(2) அத்தகைய அறிவிக்கையின் தேதியன்று அத்தகைய நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சிக்குக் கொடுபட வேண்டிய வரிகளின் அனைத்து நிலுவைகள் அல்லது வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்கள் அல்லது செலவுகளுக்குக் கொடுபடவேண்டிய தொகைகள் அல்லது இழப்பீடு அல்லது பிறவாறு கொடுபடவேண்டிய தொகைகள் ஆகியவை, அந்த மாநகராட்சிக்கென சேர்ந்த தொகையாகக் கருதப்பட்டும் அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி கொடுபடவேண்டிய நிலுவைகளாக அல்லது தொகைகளாகியிருந்தவை போன்றும் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் ஆகியன இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள் கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் ஆகியவை இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதனாலும், அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுகின்ற, நீக்கப்படுகின்ற அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுகின்ற வரையில் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(4) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் V/1920) அல்லது நேர்விற்கேற்ப 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994) அத்தகைய நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது

சிற்றூராட்சி எதனாலும் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் அல்லது நபர் எவராலும் எடுக்கப்பட்ட அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட செயல் நடவடிக்கைகள் அனைத்தும், அத்தகைய செயல் நடவடிக்கைகளானவை இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால், அதிகார அமைப்பால் அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடங்கியிருந்தாற்போன்று தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(5) அறிவிக்கையின் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும், V/1920 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டம் அல்லது நேர்விற்கேற்ப 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின்படி, எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்று, இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்குரிய தகுதி வாய்ந்த அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக, அத்தகைய நகராட்சியின், பேரூராட்சியின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய அறிவிக்கையின் தேதியன்றும், அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலரொருவராக அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதலாம் வரம்புரை:* ஆனால், (a) மாநகராட்சியின் பணியில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலருக்கு மற்றும் பணியாளருக்குப் பொருந்தத்தக்க அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதியம், ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவை குறித்த வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக, அத்தகைய அலுவலருக்கு அல்லது பணியாளருக்குப் பொருந்தக்கூடிய அத்தகைய வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய நகராட்சியின், பேரூராட்சியின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, அத்தகைய அறிவிக்கையின் தேதி வரையில் மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதியம், பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு உரிமைத் தகுதி உடையவராயிருத்தல் வேண்டும்.

*இரண்டாம் வரம்புரை*: மேலும், அத்தகைய நகராட்சியில், பேரூராட்சியில் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் எவரும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் அவர் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கோ அல்லது V/1920 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு அல்லது நேர்விற்கேற்ப 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 104 மற்றும் 105–ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டவாறான பணிக்கு அவர் மாற்றம் செய்யப்படுதற்கோ அல்லது அவர் அத்தகைய நகராட்சியின், பேரூராட்சியின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் பணியிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்படுவதற்கோ அவருக்கு விருப்பத் தெரிவினைச் செய்வதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய ஆட்குறைப்பின்போது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நலன்களுக்கு அவர் உரிமைத் தகுதியுடையவராதல் வேண்டும்.''.

## பகுதி–IV

### 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

5. (இதன் பின்பு இப்பகுதியில் 1981–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் 3–ஆம் பிரிவில், (8)–ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

511–AA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

6. 1981–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 511–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"511–AA **நகரத்தின் பரப்பிடத்தை விரிவுபடுத்துவதன் பேரிலான மாறுதல் கால வகைமுறை.**— (1) உள்ளூர் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கி நகரத்தின் பரப்பிடமானது விரிவுபடுத்தப் படும்போது அத்தகைய உள்ளூர் பரப்பிடம் தொடர்பான, நகராட்சி மன்றத்தால் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் அல்லது சிற்றூராட்சியால் அல்லது அதற்காகப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட அனைத்துச்சொத்துக்களும் அனைத்து உரிமைகளும் அவை எந்த வகையினதாக இருந்தாலும் மற்றும் அதற்குச் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக

வைத்துவரப்பட்ட அனைத்து நலன்களும் அவை எந்த வகையினதாக இருந்தாலும் அதோடு கூட மேற்சொன்ன நகராட்சி மன்றத்திற்கு, ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சிக்கு எதிராகச் சட்டமுறையில் இருந்து வருகிற அனைத்து கடப்பாடுகளும், அத்தகைய உள்ளூர் பரப்பிடத்தை நகரத்தில் உள்ளடக்கிச் செய்யப்பட்ட அத்தகைய விரிவாக்கமானது அந்த அறிவிக்கையின் தேதியன்றும் அது முதற்கொண்டும், இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்புரைகளுக்குட்பட்டு மாநகராட்சியிடம் உற்றடைதல் வேண்டும்.

(2) அத்தகைய அறிவிக்கையின் தேதியன்று அத்தகைய நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சிக்குக் கொடுபட வேண்டிய வரிகளின் அனைத்து நிலுவைகள் அல்லது வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்கள் அல்லது செலவுகளுக்குக் கொடுபடவேண்டிய தொகைகள் அல்லது இழப்பீடு அல்லது பிறவாறு கொடுபடவேண்டிய தொகைகள் ஆகியவை, அத்தகைய மாநகராட்சிக்கென சேர்ந்த தொகையாகக் கருதப்பட்டும் அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி கொடுபடவேண்டிய நிலுவைகளாக அல்லது தொகைகளாகியிருந்தவை போன்றும் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் ஆகியன இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் ஆகியவை இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுகின்ற, நீக்கப்படுகின்ற அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுகின்ற வரையில் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(4) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் V/1920) அல்லது நேர்விற்கேற்ப 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994) அத்தகைய நகராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது சிற்றூராட்சி எதனாலும் அல்லது அதிகார அமைப்பு அல்லது நபர் எவராலும் எடுக்கப்பட்ட அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட செயல் நடவடிக்கைகள் அனைத்தும், நேர்விற்கேற்ப அத்தகைய செயல் நடவடிக்கைகளானவை இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாநகராட்சியால், அதிகார அமைப்பால் அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடங்கியிருந்தாற்போன்று தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(5) அறிவிக்கையின் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும், V/1920 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டம் அல்லது நேர்விற்கேற்ப 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்று, இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்குரிய தகுதி வாய்ந்த அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய நகராட்சியின், பேரூராட்சியின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய அறிவிக்கையின் தேதியன்றும், அது முதற்கொண்டும் மாநகராட்சியின் அலுவலரொருவராக அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

*முதலாம் வரம்புரை:* ஆனால், (a) மாநகராட்சியின் பணியில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலருக்கு மற்றும் பணியாளருக்கு பொருந்தத்தக்க அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதியம், ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவை குறித்த வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக, அத்தகைய அலுவலருக்கு அல்லது பணியாளருக்குப் பொருந்தக்கூடிய அத்தகைய வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய நகராட்சியின், பேரூராட்சியின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, அத்தகைய அறிவிக்கையின் தேதி வரையில் மாநகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதியம், பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு உரிமைத் தகுதி உடையவராயிருத்தல் வேண்டும்:

*இரண்டாம் வரம்புரை*: மேலும், அத்தகைய நகராட்சியில், பேரூராட்சியில் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் எவரும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மாநகராட்சிப் பணியில் அவர் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கோ அல்லது V/1920 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு அல்லது நேர்விற்கேற்ப 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 104 மற்றும் 105–ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டவாறான பணிக்கு அவர் மாற்றம் செய்யப்படுவதற்கோ அல்லது அவர் அத்தகைய நகராட்சியின், பேரூராட்சியின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் பணியிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்படுவதற்கோ, அவருக்கு விருப்பத் தெரிவினைச் செய்வதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய ஆட்குறைப்பின்போது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நலன்களுக்கு அவர் உரிமைத் தகுதியுடையவராதல் வேண்டும்.''.

## பகுதி–V

## 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தங்கள்.

**4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.** **தமிழ்நாடு சட்டம் V/1920.**

**7.** (இதன் பின்பு இப்பகுதியில் 1920–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின், 4–ஆம் பிரிவில், (5)–ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**375–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.**

8. 1920–ஆம் ஆண்டுச் சட்டத்தின் 375–ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

**"375–A நகராட்சியின் பரப்பிடத்தை விரிவுபடுத்துவதன் பேரிலான மாறுதல் கால வகைமுறை.—** (1) உள்ளூர் பரப்பிடம் எதனையும் உள்ளடக்கி நகராட்சியின் பரப்பிடமானது விரிவுபடுத்தப்படும்போது அத்தகைய உள்ளூர் பரப்பிடம் தொடர்பான, பேரூராட்சியால் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் அல்லது சிற்றூராட்சியால் அல்லது அதற்காகப் பயன்படுத்தப்பட்ட, அனுபவிக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்துவரப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் அனைத்து உரிமைகளும் அவை எந்த வகையினதாக இருந்தாலும் மற்றும் அதற்குச் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது பொறுப்பாட்சி என்ற வகையில் அதனால் அல்லது அதற்காக வைத்துவரப்பட்ட அனைத்து நலன்களும் அவை எந்த வகையினதாக இருந்தாலும் அதோடு கூட மேற்சொன்ன பேரூராட்சிக்கு, ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கு அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சிக்கு எதிராகச் சட்டமுறையில் இருந்து வருகிற அனைத்து கடப்பாடுகளும், அத்தகைய உள்ளூர் பரப்பிடத்தை நகராட்சியில் உள்ளடக்கி செய்யப்பட்ட விரிவாக்கமானது அந்த அறிவிக்கையின் தேதியன்றும் அது முதற்கொண்டும், இது குறித்து பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசானது வழங்கக்கூடிய அத்தகைய பணிப்புரைகளுக்குட்பட்டு நகராட்சியிடம் உற்றடைதல் வேண்டும்.

(2) அத்தகைய அறிவிக்கையின் தேதியன்று அத்தகைய பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சிக்குக் கொடுபடவேண்டிய வரிகளின் அனைத்து நிலுவைகள் அல்லது வரியை இணக்கமான முறையில் தீர்த்துக் கொள்வதற்கான பிற தொகை செலுத்தங்கள் அல்லது செலவுகளுக்குக் கொடுபடவேண்டிய தொகைகள் அல்லது இழப்பீடு அல்லது பிறவாறு கொடுபடவேண்டிய தொகைகள் ஆகியவை, அத்தகைய நகராட்சிக்கென சேர்ந்த தொகையாகக் கருதப்பட்டும் அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி கொடுபடவேண்டிய நிலுவைகளாக அல்லது தொகைகளாகியிருந்தவை போன்றும் வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியால் விதிக்கப்பட்டு வந்த அனைத்து வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் ஆகியன இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி நகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் ஆகியவை இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுகின்ற, நீக்கப்படுகின்ற அல்லது கலைத்து கைக்கொள்ளப்படுகின்ற வரையில் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி அல்லது நேர்விற்கேற்ப 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994) அத்தகைய பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது சிற்றூராட்சி எதனாலும் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் அல்லது நபர் எவராலும் எடுக்கப்பட்ட அல்லது எதிராக எடுக்கப்பட்ட செயல் நடவடிக்கைகள் அனைத்தும், அத்தகைய

செயல் நடவடிக்கைகளானவை இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி நகராட்சியால், அதிகார அமைப்பால் அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடங்கியிருந்தாற்போன்று தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(5) அறிவிக்கையின் தேதிக்கு முன்னர் அதிகார அமைப்பு எதனாலும், இந்தச் சட்டம் அல்லது நேர்விற்கேற்ப 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்திருந்தாற்போன்று, இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்குரிய தகுதி வாய்ந்த அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய பேரூராட்சியின், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய அறிவிக்கையின் தேதியன்றும், அது முதற்கொண்டும் நகராட்சியின் அலுவலரொருவராக அல்லது பணியாளரொருவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

*முதலாம் வரம்புரை:* ஆனால், (a) நகாரட்சியின் பணியில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் விளைவாக அத்தகைய அலுவலருக்கு மற்றும் பணியாளருக்கு பொருந்தத்தக்க அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதியம், ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவை குறித்த வரையறைகளும், நிபந்தனைகளும் அத்தகைய அறிவிக்கையின் தேதிக்கு உடனடி முன்பாக, அத்தகைய அலுவலருக்கு அல்லது பணியாளருக்குப் பொருந்தக்கூடிய அத்தகைய வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் குறைவுபடாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய பேரூராட்சியின், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் கீழ் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது, அத்தகைய அறிவிக்கையின் தேதி வரையில் நகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அவர், ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதியம், பணிக்கொடை ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு உரிமைத் தகுதி உடையவராயிருத்தல் வேண்டும்:

*இரண்டாம் வரம்புரை:* மேலும், அத்தகைய பேரூராட்சியில், ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் எவரும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தைகய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் நகராட்சிப் பணியில் அவர் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கோ அல்லது இந்தச் சட்டத்தின் 73–A எனும் பிரிவில் குறிப்பிடப்பட்ட பணிக்கு அல்லது நேர்விற்கேற்ப 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 104 மற்றும் 105–ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டவாறான பணிக்கு அவர் மாற்றம் செய்யப்படுவதற்கோ அல்லது அவர் அத்தகைய பேரூராட்சியின், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது நேர்விற்கேற்ப சிற்றூராட்சியின் பணியிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்படுவதற்கோ, அவருக்கு விருப்புத் தெரிவினைச் செய்தற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய ஆட்குறைப்பின்போது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நலன்களுக்கு அவர் உரிமைத் தகுதியுடையவராதல் வேண்டும்.''.

2012–ஆம் ஆண்டு
ஜனவரித் திங்கள்
25–ஆம் நாள்.

**கே. ரோசையா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

## விளக்கவுரை

அருகாமையில் உள்ள உள்ளூர் பரப்பிடங்களை உள்ளடக்கி மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் ஆட்சி நிலவரைப் பகுதியின் வரம்புகள் விரிவுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து செய்யப்படும் மாற்றங்களுக்கான செயற்பாடானது பரிசீலனையில் உள்ளது. 1919—ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் IV/1919), 1971—ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971), 1981—ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநாகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1981), 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) ஆகிய சட்டங்களில், சொத்திருப்புகள் மற்றும் அவற்றின் கடப்பாடுகளை உற்றடையச் செய்தல், வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் வசூலிக்கப்பட்டு வருவதைத் தொடருதல், அத்தகைய உள்ளூர்ப் பரப்பிடங்களின் உள்ளூர் அமைப்புகளின் பணியாளர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் போன்ற அத்தகைய மாற்றங்கள் தொடர்பான பொருட்பாடுகள் குறித்துத் திறம்பட நடவடிக்கை எடுப்பதற்குத் தேவைப்படும் வகை முறையானது புகுத்தப்படலாமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

2012–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:—

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2012.**

***1978–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.***

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:—

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கின்றார்.—

**1.** (1) இந்த அவசரச் சட்டம் 2012–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்**

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 28/1978.**

**2.** 1978–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சட்டத்தின் 87–ஆம் பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது, சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— **87–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

"*வரம்புரை.*—ஆனால், அத்தகைய விரிவாக்கத்தின் தேதிக்கு முன்பு தொடர்புள்ள உள்ளாட்சி அதிகார அமைப்பினால், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் பணிகளைப் பொறுத்த அளவில் விதிக்கப்பட்டவாறான வரிகள், கட்டணங்கள், தீர்வைகள் அனைத்தும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி வாரியத்தால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் ஆகியவை இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றியமைக்கப்படுகின்ற, நீக்கப்படுகின்ற அல்லது கலைத்துக் கைக்கொள்ளப்படுகின்ற வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.".

2012–ஆம் ஆண்டு
ஜனவரித் திங்கள்
25–ஆம் நாள்.

**கே. ரோசையா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

## விளக்கவுரை

அருகாமையில் உள்ள உள்ளூர் பரப்பிடங்களை உள்ளடக்கி சென்னை மாநகராட்சியின் ஆட்சி நிலவரைப் பகுதியின் வரம்புகள் விரிவுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து செய்யப்படும் மாற்றங்களுக்கான செயற்பாடானது பரிசீலனையில் உள்ளது. 1978–ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சட்டத்தில், (தமிழ்நாடு சட்டம் 28/1978) அத்தகைய உள்ளூர்ப் பரப்பிடங்களின் உள்ளூர் அமைப்புகளால் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் பணிகளைப் பொறுத்த அளவில் வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் விதிக்கப்பட்டு வரும் நிலையைத் தொடர்வது குறித்துத் திறம்பட நடவடிக்கை எடுப்பதற்குத் தேவைப்படும் வகைமுறையானது புகுத்தப்படலாமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. இந்த அவசரச்சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.